# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2022

## வளர்தமிழ் 6

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. பின்வருவனவற்றுள் நெட்டெழுத்து

அ ) பூ ☐ ஆ ) கெ ☐

இ ) டு ☐ ஈ )ச ☐

2. நீரருந்தும் கலத்தை ____________ என அழைப்பர்.

அ ) வட்டில் ☐ ஆ ) குவளை ☐

இ ) குடம் ☐ ஈ ) பானை ☐

3. பாரி மன்னனின் நண்பன்

அ ) பரணர் ☐ ஆ ) பாரதியார் ☐

இ ) கபிலர் ☐ ஈ ) திருவள்ளுவர் ☐

4. இலக்கண வகையால் காலம் ____________ வகைப்படும்.

அ ) நான்கு ☐ ஆ ) இரண்டு ☐

இ ) மூன்று ☐ ஈ ) ஐந்து ☐

5. பெரியோரது சொல்லைக் கேட்காவிட்டால் பெரிதும் ____________ ஏற்படும்.

அ ) துன்பம் ☐ ஆ ) இன்பம் ☐

இ ) மகிழ்ச்சி ☐ ஈ ) சினம் ☐

6. ஔவையாருக்குக் களைக்கொட்டு என்னும் கருவியைக் கொடுத்தவர்

அ ) ஓரி ☐ ஆ ) பாரி ☐

இ ) காரி ☐ ஈ ) பேகன் ☐

7. அகத்தின் அழகு முகத்தில் தெரியும். இதில் அகம் என்பதன் எதிர்ச்சொல்

அ ) பகை ☐ ஆ ) கடினம் ☐

இ ) குளிர் ☐ ஈ ) புறம் ☐

8. தலைவன் என்பது

அ ) ஆண்பால் ☐ ஆ ) பலவின்பால் ☐

இ ) பெண்பால் ☐ ஈ ) பலர்பால் ☐

9. ஈழம் என்பதன் பொருள்

அ ) தங்கம் ☐ ஆ ) வெள்ளி ☐

இ ) இரும்பு ☐ ஈ ) செப்பு ☐

10. மாந்தனின் சிறந்த குணங்களில் ஒன்று

அ ) களவெடுத்தல் ☐ ஆ ) பொய்பேசுதல் ☐

இ ) பிறருக்கு உதவுதல் ☐ ஈ ) ஏமாற்றுதல் ☐

11. திராவிட மொழியியலின் தந்தை எனச் சிறப்பிக்கப்பட்டவர்

அ ) இளங்கோ ☐ ஆ ) வீரமாமுனிவர் ☐

இ ) பெருஞ்சித்திரனார் ☐ ஈ ) கால்டுவெல் ☐

12. முன்னிலைக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ ) நடிப்பேன் ☐ ஆ ) நடித்தாய் ☐

இ ) நடித்தான் ☐ ஈ ) நடித்தோம் ☐

13. முதியவனான எல்லாளனைத் தனிப்போருக்கு அழைத்தவன்

அ ) துட்டகெமுனு ☐ ஆ ) காகவனத்தீசன் ☐

இ ) தேவநம்பியதீசன் ☐ ஈ ) அசேலன் ☐

14. மரங்கொத்தி என்ற சொல்லைப் பிரித்து எழுதினால்

அ ) மரங் + கொத்தி ☐ ஆ ) மர + கொத்தி ☐

இ ) மரக் + கொத்தி ☐ ஈ ) மரம் + கொத்தி ☐

15. **பழமொழி :**

கடுகு சிறிதானாலும் காரம் ________ .

அ ) சிறிது ☐ ஆ ) பெரிது ☐

இ ) அரிது ☐ ஈ ) செறிவு ☐

16. ஒரே பொருள் தரும் இரு சொற்கள்

அ ) உவகை,வறுமை ☐ ஆ ) ஞாயிறு,வானம் ☐

இ ) வள்ளல்,கொடையாளி ☐ ஈ ) விண்,காற்று ☐

17. ஆடை என்பதன் பொருள்

அ ) உடை ☐ ஆ ) மாலை ☐

இ ) இடம் ☐ ஈ ) உடுக்கு ☐

18. ஆங்கிலேயர் இலங்கையை ஒன்றிணைத்து ________ ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்.

அ ) 100 ☐ ஆ ) 112 ☐

இ ) 115 ☐ ஈ ) 118 ☐

19. தமக்குத் தீங்கு செய்பவரையும் காப்பவர்

அ ) தீயோர் ☐ ஆ ) பகைவர் ☐

இ ) இரண்டகர் ☐ ஈ ) அறிவுடையோர் ☐

20. தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன

அ ) எண் ☐ ஆ ) இடம் ☐

இ ) காலம் ☐ ஈ ) திணை ☐

21. நுண்ணுயிரிகளைக் கண்டுபிடித்தவர்

அ ) கிரகம்பெல் ☐ ஆ ) மோர்சு ☐

இ ) வன்லீவன்குக் ☐ ஈ ) நியூட்டன் ☐

22. தொழிலின் பெயரைக் குறிப்பது

அ ) சினைப்பெயர் ☐ ஆ ) தொழிற்பெயர் ☐

இ ) காலப்பெயர் ☐ ஈ ) குணப்பெயர் ☐

23. வானத்தில் விண்மீன்கள் அழகாக மின்னுகின்றன. இச் சொல்லியத்தின் எழுவாய்

அ ) விண்மீன்கள் ☐ ஆ ) அழகாக ☐

இ ) வானத்தில் ☐ ஈ ) மின்னுகின்றன ☐

24. ஒரு கருத்தை அல்லது ஒரு நிகழ்வை அறியும் நோக்குடன் வினவுவதாக அமைவது

அ ) ஏவற்சொல்லியம் ☐ ஆ ) வினாச்சொல்லியம் ☐

இ ) மெய்ப்பாட்டுச்சொல்லியம் ☐ ஈ ) கூட்டுச்சொல்லியம் ☐

25. இலங்கையில் கல்யாணி என்னும் இடத்தில் __________ அரசு அமைந்திருந்தது.

அ ) சங்கிலியனது ☐ ஆ ) ஒல்லாந்தரது ☐

இ ) இயக்கரது ☐ ஈ ) நாகரது ☐

26. ஓர் + இலை என்பதைச் சேர்த்து எழுதினால் __________ .

அ ) ஓரிலை ☐ ஆ ) ஓர்இலை ☐

இ ) ஒருஇலை ☐ ஈ ) ஒருயிலை ☐

27. யாழ்ப்பாண அரசு பற்றிய குறிப்புகளை எழுதிய வெளிநாட்டவர்

அ ) ஜி. எசு. மெண்டிசு ☐ ஆ ) கே.எம்.டி.சில்வா ☐

இ ) இபன்பற்றுற்றா ☐ ஈ ) இராசசிம்மன் ☐

28. பலவின்பாலைக் குறிக்கும் வினைச்சொல்

அ ) கட்டியது ☐ ஆ ) கட்டுகின்றான் ☐

இ ) கட்டினார் ☐ ஈ ) கட்டின ☐

29. சொல்லாலும் செயலாலும் வெளிப்படுவது

அ ) பணம் ☐ ஆ ) புகழ் ☐

இ ) பண்பாடு ☐ ஈ ) நாகரிகம் ☐

30. மணிபல்லவம் இன்று __________ என அழைக்கப்படுகிறது.

அ ) நெடுந்தீவு ☐ ஆ ) நயினாதீவு ☐

இ ) அனலைதீவு ☐ ஈ ) மண்டதீவு ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்று சோமசுந்தரப் புலவர் பாடினார். ஆடிப்பிறப்பு, தைப்பொங்கல் என்பன தமிழருடைய திருநாட்களாகும். நத்தார்விழா இறைநெறி சார்ந்த கொண்டாட்டமாகும். உழவர்கள் கதிரவனுக்கு நன்றி செலுத்துவதற்காகத் தைப்பொங்கலைக் கொண்டாடுவர். தைப்பொங்கல் திருநாளில் விருந்தோம்பற் பண்பு மேலோங்கி நிற்கின்றது. திருமணம், கலாசாரம் சார்ந்த கொண்டாட்டமாகும். கொண்டாட்டங்களின் போது உறவினர்களும் அயலவர்களும் ஒன்று கூடுவர். கொண்டாட்டங்கள் மாந்தனின் பண்பாட்டை வெளிப்படுத்தி நிற்கின்றன. ஒருவரை ஒருவர் மதித்து வாழக் கொண்டாட்டங்கள் துணைபுரிகின்றன.

1. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை என்று பாடியவர் யார்?

_______________________________________________

2. தைப்பொங்கல் யாருடைய திருநாள்?

_______________________________________________

3. இங்கு கூறப்பட்ட இறைநெறி சார்ந்த கொண்டாட்டம் எது?

_______________________________________________

_______________________________________________

4. தைப்பொங்கல் திருநாளில் எப்பண்பு மேலோங்கி நிற்கின்றது?

_______________________________________________

_______________________________________________

5. ஒருவரை ஒருவர் மதித்து வாழ எவை துணைபுரிகின்றன?

_______________________________________________

_______________________________________________

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. "அற்றைத்திங்கள் அவ்வெண் நிலவின்......" என்ற பாடலைப் பாடியவர்கள் யாவர்?

___

2. வெட்ட வெட்ட நிழலைத் தருவது எது?

___

3. எது தன்தாயை விட இனியது எனக் கவிஞர் காசி ஆனந்தன் கூறுகின்றார்?

___

4. "பாரி பறித்த பறியும் பழையனூர்..." என்ற பாடலைப் பாடியவர் யார்?

___

5. முன்பு இலங்கைத்தீவின் தென்மேற்குப் பகுதியின் விளை பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த அரசு எது?

___

6. தேசிக விநாயகம்பிள்ளைக்கு மதிப்பளிக்கும் முகமாக எத்தனையாம் ஆண்டு முத்திரை வெளியிடப்பட்டது?

___

7. சங்கிலியனைச் சிறைப்பிடித்தவர் யார்?

___

| புள்ளிகள் 10 |
|---|

4) தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி; கவிதையை முழுமையாக்குக.

# ஆலமரம்

| | | | | |
|---|---|---|---|---|
| விதை | கூடு | பெரியது | பறவைகள் | தங்கலாம் |

ஆலம் விதை சிறியது

ஆலமரம் ______________

ஆலமர நிழலிலே

ஆயிரம்பேர் ______________

பறவை ______________ கட்டலாம்

பழமும் வௌவால் தின்னலாம்

சிறகடிக்கும் ______________

சேர்ந்து கூடி வாழலாம்

ஆலம் ______________ போன்றவர்

அருமையான சிறுவர்கள்

காலங்காலம் வளருவர்

கருணையோடு உதவுவர்

புள்ளிகள் 10

## 5) இலக்கண/மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

அ ) இடப்பெயர் ____________________

ஆ ) பலர்பால் ____________________

இ ) உயர்திணை ____________________

2. தொடர்ச் சொல்லியத்தைத் தனிச்சொல்லியங்களாக எழுதுக.

அறிவியலாளர் விண்வெளிக்குச் சென்று ஆராய்ச்சி செய்தனர்.

________________________________________

________________________________________

3. பின்வரும் சொற்களின் இடைநிலைகளைக் கண்டறிந்து எழுதுக.

கண்டான் ____________________

போகின்றன ____________________

எழுதுவாள் ____________________

4. பின்வருவனவற்றின் எதிர்ச்சொற்களைத் தருக.

வீரன் ____________________

வலம் ____________________

குடு ____________________

5. பொருத்தமாக எழுதுக.

| **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
|---|---|---|
| __________ | வாழ்கின்றனர் | வாழ்வர் |
| மேய்ந்தது | மேய்கின்றது | __________ |
| ஆடினாள் | __________ | ஆடுவாள் |

புள்ளிகள் 15

6) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. பொங்கலன்று அம்மா ______________ ஏற்றினார்.

   ( குத்துவிளக்கு, குத்துவிலக்கு )

2. நல்லவருக்குச் செய்த உதவியானது என்றும் ______________ நிலைத்து நிற்கும்.

   ( அளியாது, அழியாது )

3. பூமி வெப்பமாகும் போது ______________ உருகும்.

   ( பனிமலைகள், பணிமலைகள் )

4. திலீபன் மக்களுக்காக ______________ போராடினார்.

   ( அறவழியில், அரவழியில் )

5. இராவணன் பண்பும் ______________ மிக்க தலைவன்.

   ( வீறமும், வீரமும் )

புள்ளிகள் 05

7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 80 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

* எல்லாளன்
* சுற்றுலா
* எனது செல்ல உயிரி
* கோடைகாலம்
    - இக்காலத்தில் ஏற்படும் மாற்றங்கள்
    - விளையாட்டுகள்
    - கோடைகாலத்தில் செல்லும் இடங்கள்

புள்ளிகள் 20